ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2028/21 - 2017 ජූලි මස 19 වැනි බදාදා - 2017.07.19
*2028/21 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: கேஓரீ/எல்என்டி/ஏசீகிவ்வீஜ/01/72.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/5/2015/சீஈபி/201.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்** :

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தின் கொட்டபொல பிரதேச செயலாளர் பிரிவில், கொஸ்மோதர கிராம உத்தியோகத்தர் பிரவில், கொஸ்மோதர கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை அதிபரால் தயாரிக்கப்பட்ட அ. க. பி. 45 இல் தாள் இல. 117 இல் பிற்சேர்க்கை 89 இல் காணித்துண்டுகள் இல. 2297, 2298 மற்றும் 2299 என விபரிக்கப்பட்டுள்ள சுமார் 0.0839 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித்துண்டுகளின் எல்லைகள் பின்வருமாறு :-

01. **துண்டு இல. 2297**
**காணியின் பெயர் : சம்போதிவத்த ; உரிமை கோருபவர் : சம்போதி பொறுப்பு அதிகார சபை, இல.9A, க்லோசன் பர்க்வீதி, மாகால்ல, காலி; விஸ்தீரணம் : 0.0155 ஹெக்டயார்.**

வடக்கு : துண்டு இல. 742 1/2 மற்றும் 331; கிழக்கு: துண்டு இல. 742 1/2, 2298 மற்றும் 331; தெற்கு: துண்டு இல. 331; மேற்கு: துண்டு இல. 331.

02. **துண்டு இல. 2298**
**காணியின் பெயர் : சம்போதிவத்த ; உரிமை கோருபவர் : சம்போதி பொறுப்பு அதிகார சபை, இல.9A, க்லோசன் பர்க்வீதி, மாகால்ல, காலி; விஸ்தீரணம் : 0.0066 ஹெக்டயார்.**

வடக்கு : துண்டு இல. 742 1/2 ; கிழக்கு: துண்டு இல. 742 1/2 மற்றும் 331; தெற்கு: துண்டு இல. 331; மேற்கு: துண்டு இல. 2297 மற்றும் 742 1/2.

03. **துண்டு இல. 2299**
**காணியின் பெயர் : சம்போதிவத்த ; உரிமை கோருபவர் : சம்போதி பொறுப்பு அதிகார சபை, இல.9A, க்லோசன் பர்க்வீதி, மாகால்ல, காலி; விஸ்தீரணம் : 0.0618 ஹெக்டயார்.**

வடக்கு : துண்டு இல. 742 1/2 மற்றும் 331 ; கிழக்கு: துண்டு இல. 331 மற்றும் 744; தெற்கு: துண்டு இல. 744 மற்றும் 331; மேற்கு: துண்டு இல. 331 மற்றும் 742 1/2.

1A - G 25916 - 37 (2017/07)
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கொட்டபொல பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கணேஷ அமரசிங்க,
பிரதேச செயலாளர்,
கொட்டபொல.

பிரதேச செயலகம்,
கொட்டபொல,
2017, யூலை 17.

8-105